# உங்களால் ஒன்றும் செய்ய முடியாத போது என்ன செய்வது [12:1-18, 24]

கிறிஸ்தவர்கள் ஆழ்ந்த வருத்தம் தோய்ந்த குரலில், "இன்னமும் நான் என்ன செய்ய வேண்டுமென்று தெரிய வில்லை. நான் அறிந்த வரையிலும் ஒவ்வொன்றையும் செய்தி ருக்கிறேன்!" என்று கூறுவதை அநேக வருடங்களாக நான் கேட்டிருக்கின்றேன். சமீபத்தில் நான் படித்த கதையொன்று என் நினைவுக்கு வருகின்றது. ஒரு சிறு பையன் தனது தகப்பனு டன் நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தான். அப்பையன் ஒரு பெரிய கல்லை நகர்த்த முடிவு செய்தான். அந்தப் பாறையோடு அவன் போராடியும் அது சற்றும் இடம் பெயராமல் இருந்ததை அந்தத் தகப்பன் கவனித்தார். கடைசி யாக அம்மனிதர் அப்பையனிடம், "நீ உன் பலம் முழுவதையும் பயன்படுத்துகின்றாயா?" என்று கேட்டார். அதற்கு அவன், "ஆம் அப்பா, நான் என் பலம் முழுவதையும் பயன்படுத்து கின்றேன்" என்று மூச்சுத் திணறியபடியே கூறினான். அதற்கு அந்தத் தகப்பன், "இல்லை, நீ அவ்வாறு செய்யவில்லை - ஏனென்றால் நீ என்னிடம் உனக்கு உதவி செய்யும்படி கேட்கவில்லையே!" என்று பதில் கூறினார். நீங்களும் நானும் நமது வாழ்க்கையில் உள்ள தடைகளை நீக்க முயற்சி செய்கையில், சில வேளைகளில் நமது பரலோகத்தின் தந்தை யிடம் உதவி செய்யும்படி கேட்பதைத் தவறவிட்டு, நம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்திருப்பதாக நினைத்துக் கொள்கின்றோம். பவுல் பின்வருமாறு எழுதினார்:

> கர்த்தர் சமீபமாயிருக்கிறார். நீங்கள் ஒன்றுக்குங் கவலைப் படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப் பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும்

> வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும் (பிலி. 4:5ஆ-7).

நீங்கள் அறிந்துள்ள எல்லாவற்றையும் செய்திருக்கும் நிலையில், விஷயத்தைத் தேவனை நோக்கித் திருப்புங்கள்.

இந்தக் கட்டுரையானது ஜெபத்தின் முக்கியத்துவம் மற்றும் வல்லமை ஆகியவை பற்றியதாகும். வேதாகமத்தின் வரலாற்றில் அநேக நிகழ்ச்சிகள் - ஞானத்திற்கான சாலமோனின் ஜெபம், எலியாவும் மூன்றரை வருடப் பஞ்சமும், மற்றும் எசேக்கியாவின் ஆயுள் பதினைந்து வருடங்கள் கூட்டப்படுதல் முதலியவைகள் - ஜெபத்தின் மதிப்பை விளக்கப்படுத்துகின்றன. இவைகளில் எவைகளும், அப். 12ல் பேதுரு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட வரலாற்றினைக் காட்டிலும் அதிகமாக மனதில் பதிவதாயில்லை.

## உபத்திரவமும் சிறைச்சாலையும் (12:1-6, 10)

அதிகாரம் 12, "அந்தக் காலத்திலே ..." என்று தொடங்குகின்றது (வ. 1அ). "அந்தக் காலம்" என்பது முந்திய அதிகாரத்தின் முடிவில், யூதேயாவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, அந்தியோகியாவிலிருந்த சீஷர்கள் உதவுவதற்குத் தீர்மானித்த காலத்தைக் குறிக்கின்றது. அதே கால கட்டத்தில்,[1] "ஏரோது ராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி"[2] (வ. 1ஆ). சவுலின் மனமாற்றத்திலிருந்து எருசலேம் சபையானது சமாதான காலம் ஒன்றை மகிழ்ச்சியுடன் அனுபவித்துக் கொண்டிருந்தது (9:31); இப்பொழுதோ அங்கு அந்தச் சமாதானமானது தூள் தூளாக நொறுக்கப்பட்டது.

இது அப். நட. புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, சபைக்கு ஏற்பட்ட நான்காவது உபத்திரவம் ஆகும். முதல் மூன்று உபத்திரவங்களிலுமிருந்து இது மாறுபட்டதாகும், ஏனெனில் இது சனதெரீன் சங்கத்தாரால் தூண்டி விடப்பட்டதாயிராமல், ரோம அரசாங்கத்தின் பிரதிநிதியாகிய ஏரோது இராஜாவினால் ("ஏரோதின் வீட்டார்" என்ற வரைபடத்தைக் காணவும்) தூண்டிவிடப்பட்டதாயிருந்தது. இயேசு பிறந்த

போது குழந்தைகளைக் கொல்லும்படி உத்தரவிட்ட பெரிய ஏரோதின் பேரனாகிய முதலாம் ஏரோது அகிரிப்பா என்பவனே இந்த உபத்திரவத்தைத் தூண்டியவன் ஆவான். அதிகாரம் 12ன் நிகழ்ச்சிகள் நடைபெற்ற போது இந்த ஏரோது பலஸ்தீனம் முழுவதையும் ஆண்டு கொண்டிருந்தார்.

பலஸ்தீனத்தின் அதிகாரிகளாக நியமிக்கப்பட்ட மற்ற எல்லா ரோம அதிகாரிகளைப் போலவே ஏரோதுக்கும் செசரியாவில் ஒரு அரண்மனை இருந்தது, சாதாரணமாக அவன் பண்டிகை நாட்களில் மட்டுமே எருசலேமுக்கு வந்தான். அப். 12ல், அவன் பஸ்கா பண்டிகையை எதிர்நோக்கியே எருச லேமுக்கு வந்திருந்தான். அவ்வேளையில் தமது குடிமக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக, அவன் சபையின் மீது ஒரு உபத்திரவத்தைத் தூண்டி விட்டான். தொடக்கத்திலே (2:47) சபையானது எருசலேம் குடிமக்களின் தயவைப் பெற்றிருந்தது, ஆனால் அது மாறிவிட்டிருந்தது. ஸ்தேவானின் பிரசங்கமானது மக்களை சபைக்கெதிராகத் திருப்பி விட்டிருந்தது (6:12), மற்றும் சமீப காலத்தில் புறஜாதியாரும் ஏற்றுக் கொள்ளப் பட்டார்கள் என்ற விஷயமானது அவர்களின் வெறுப்பை ஒருவேளை இன்னும் அதிக வலுவாக்கியிருக்கலாம். வெகு ஜனத் தொடர்பு என்ற இயக்கத்திற்காக இயேசுவைப் பின்பற்று பவர்களைத் துன்பப்படுத்த ஏரோது முடிவு செய்தான்.

இன்னொரு விபரமும் கூட, இந்த உபத்திரவத்தைத் தனிப் பட்டதாக்குகின்றது. தொடக்கத்தில், ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலர்களைக் கைது செய்திருந்தனர், ஆனால் அவர்களைச் சிறையில் அடைத்தலிலோ அல்லது அமைதியா யிருக்கச் செய்வதிலோ அவர்கள் வெற்றியடைந்திருக்கவில்லை. தொடர்ந்து வந்த உபத்திரவங்கள், பன்னிருவர்மேல் (8:1) கவனம் செலுத்தப்படுவதற்குப் பதில், சபையின் “சாதாரண” உறுப்பினர்கள்மேல் கவனம் செலுத்தப்பட்டதாயிருந்தன. மறுபடியும் ஒரு முறை ஏரோது, எதிர்ப்பைத் தாங்க வலு வற்றவர்களாய்க் காணப்பட்ட தலைவர்களாகிய அப்போஸ் தலர்களின்மேல் கவனம் செலுத்தினான். சபைக்கு உள்ளும், புறமும் இருந்தவர்கள் யாவரும், முதன்முறையாகப் பன்னிரு வரில் ஒருவரைக் கொலை செய்ததில் யாரோ ஒருவர் வெற்றி பெற்றது பற்றி திகைப்படைந்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஏரோதின் மாமனாகிய, ஏரோது அந்திப்பா என்பவன்

யோவான் ஸ்நானனின் தலையை வெட்டுவிக்கும்படிக் கட்டளை கொடுத்திருந்தான், ஏரோதும் அதே வழிமுறையைக் கையாண்டான். ‘‘யோவானுடைய சகோதரனான யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலை செய்தான்’’ (12:2; ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டார், யாக்கோபு சிரச்சேதம் செய்யப்பட்டார். கொலைத் தண்டனை நிறைவேற்ற அநேக வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டன, பழைய ஏற்பாட்டில் முன்னுரைக்கப்பட்டபடி இயேசு சிலுவையில் அறையப்பட்டது மிகவும் குறிப்பிட்டத் தக்கதாகும்).

திகைப்பூட்டும் இந்நிகழ்ச்சியின் பதிவில் லூக்காவின் கட்டுப்பாடு நம்ப முடியாததாயிருக்கின்றது.[3] மூல பாஷைகளில் அவர் அப்போஸ்தலர் ஒருவரின் முதல் மரண தண்டனை பற்றிக் கூறுவதற்கு ஏழு வார்த்தைகளை மட்டுமே பயன்படுத்தினார்! கொலை செய்யப்பட்ட அந்த யாக்கோபு இயேசுவினிடத்தில் சலுகை பெற்றிருந்த உள்வட்டக் குழுவின் பாகமாயிருந்தார்.[4] இராஜ்யம் ஒரு அரசியல் ரீதியானது (1:6; குறிப்புகளைக் காணவும்.) என்று எண்ணிய யோவான் மற்றும் யாக்கோபு ஆகியோரின் தாய், இயேசுவினிடம் தனது மகன்களுக்கு அவருடைய வலது மற்றும் இடது புறத்தில் அதிகாரமுள்ள இடங்களைத் தரும்படிக் கேட்டுக் கொண்டபோது, இயேசுவால், யாக்கோபின் மரணம் முன்னுரைக்கப்பட்டது. இயேசு திகைப்படைந்திருந்தார். அவர் யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரிடத்தில் ‘‘நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை’’ என்று கூறினார், பிறகு, ‘‘நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்க முடியுமா?” (மத். 20:22) என்று கேட்டார். இயேசு தமக்காகக் காத்திருக்கும் பாடுகளின் பாத்திரத்தைப் பற்றிப் பேசினார். யாக்கோபும், யோவானும் “எங்களால் முடியும்” என்று அழகாய்க் கூறினார்கள். பிறகு இயேசு கவலையுடன், ‘‘என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், ...’’ (மத். 20:22, 23; பின்னாளில் பத்மூதீவுக்குக் கடத்தப்பட்டபோது யோவான் இந்தப் பாடுகளின் பாத்திரத்தில் பானம் பண்ணினார் [வெளி. 1:9]. நாமறிந்த வரையிலும், யோவான் வேதசாட்சியாக மரிக்கவில்லை) என்றார். ஒருவேளை இந்த வார்த்தைகள் யாக்கோபுவின் சிந்தனையில் அவர் தலை வெட்டப்படுகையில் வந்திருக்கலாம். ‘‘நான்

கேட்டது இன்னதென்று நான் அறிந்திருக்கவில்லையோ?'' என்று அவர் எண்ணியிருக்க வேண்டும்.[5]

யாக்கோபின் தலை வெட்டப்பட்டதற்கு மக்களின் பதில் செயல் ஏரோது நம்பியிருந்த எல்லாமுமாக இருந்தது: "அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் கண்டு" (வ. 3அ). மூன்றாவது அப்போஸ்தலரைக் கொன்ற செயலானது அவர்களைப் பிரியப்படுத்தியிருந்ததென்றால், முதலாவது அப்போஸ்தலரைக் கொன்றால், அவர்கள் வாழ்நாள் முழுவதும் அவனுக்கு விசுவாசமான குடிமக்களாய் இருப்பார்கள் என்று அவன் முடிவு செய்தான்! "பேதுருவையும் பிடிக்கத் தொடர்ந்தான்''; "அவனைப் பிடித்துச் சிறைச்சாலையிலே வைத்து ... அவனைக் காக்கும்படி வகுப்புக்கு நான்கு போர்ச் சேவகராக ஏற்படுத்திய நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவித்தான்" (வ. 3ஆ, 4).

பேதுரு கைது செய்யப்பட்டதைப் பற்றிக் கூறுகையில், லூக்கா, ஆசிரியர் குறிப்பு ஒன்றையும் தருகின்றார்: "அப்பொழுது புளிப்பில்லாத அப்பப் பண்டிகை நாட்களாயிருந்தது'' (வ. 3இ). ''புளிப்பில்லாத அப்பப் பண்டிகை நாட்கள்" என்பது ஒரு வாரமளவும் நீடிக்கும் புளியாத அப்பப் பண்டிகையும், அதன் நிறைவில் பஸ்காப் பண்டிகை வருவதையும் குறித்தது. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், இந்த இரு பண்டிகைகளும் ஒன்று சேர்க்கப்பட்டு, பஸ்கா என்று அழைக்கப்பட்டது. ஏரோது எதற்காக எருசலேம் வந்தான் என்பதை லூக்கா தமது வாசகர்களுக்குத் தெரிவித்திருக்கலாம்; முன்னமே குறிப்பிட்டபடி, பஸ்கா போன்ற விசேஷித்த பண்டிகைகளின்போது ரோம ஆளுநர்கள் செசரியாவிலிருந்து, எருசலேமுக்கு வருவார்கள். ஏரோது தன்னை அலங்கரித்துக் காட்சி தருவதற்குப் பெரிய கூட்டம் ஒன்றைத் தேர்ந்தெடுத்ததால், பஸ்கா பண்டிகையன்று யூதர்களின் கூட்டம் நிரம்பித் ததும்பும் எருசலேமுக்கு வரத் தீர்மானித்தான் என்பதையும் லூக்கா கோடிட்டுக் காட்டியிருக்கலாம்.

ஆயினும், பண்டிகையின் போது ஒரு உபத்திரவத்தைத் தூண்டி விடுவதென்பது ஏரோதுக்கு ஒரு பிரச்சனையை உண்டாக்கியிருக்கும். யாக்கோபின் கைது, ''விசாரணை'' மற்றும் கொலைத் தண்டனை ஆகியவை சுமுகமாய் நடந்தேறிற்று; பண்டிகைக்கு முன்பு அவசர அவசரமாக அது

*செய்யப்பட்டிருந்திருக்க வேண்டும். ஆனால் பேதுரு கைது செய்யப்பட்டபோது, அவர்களுக்குப் பண்டிகை நாட்களாய் இருந்தது. பரிசுத்தமான கால கட்டத்தில் வெளிப்படையாய்க் கொலைத் தண்டனையை நிறைவேற்றுதல் என்பது யூதர்களை மனம் புண்படச் செய்யும் (மாற். 14:2). ஏரோதைப் பொறுத்த மட்டில் இது ஒரு சிறு விஷயம்தான், ஆனாலும் அதை தனது ஆதாயத்திற்காக அவன் பயன்படுத்திக் கொள்ள முடியுமே. வாரம் முழுவதும் எதிர்பார்ப்பு அதிகரித்துக் கொண்டிருக்கும். பிறகு, "பஸ்கா பண்டிகைக்குப் பின்பு[6] ஜனங்களுக்கு முன்பாக அவனை வெளியே கொண்டு வரலாம்'' (அப். 12:4ஆ). யாக்கோபின் கதையை முடித்தது போலவே பேதுருவின் கதையையும் முடித்து விடலாம் என்று ஏரோது திட்ட மிட்டான் என்பதில் சந்தேகமில்லை (12:11).*

*ஏழு நாட்கள் பண்டிகையின் போது, பேதுரு தப்பிச் செல்லும் எந்த வாய்ப்பையும், ஏரோது விட்டு வைக்கவில்லை. எருசலேமில் இருந்த[7] ரோமச் சிறைச்சாலையை அவன் அதிக அளவு காவல் பண்ணப்பட்டதாக்கினான். சாதாரணமாக, அரசியல் கைதியொருவன் எளியமுறையிலேயே சிறை வைக்கப்படுவான். பேதுருவோ தனக்கும் விடுதலைக்கும் இடையில் பூட்டப்பட்ட மூன்று கதவுகள் உள்ள உட்காவ லறையில் வைக்கப்பட்டார் (வ. 10). அரசியல் கைதிகளுக்கு விசேஷித்த காவலர்கள் யாரும் நியமிக்கப்படுவது வழக்கமல்ல; அல்லது அப்படி நியமிக்கப்பட்டால், ஒரு காவலர்தான் கைதியைக் காத்துக் கொண்டிருப்பார். இருப்பினும் ஏரோது, பேதுருவைப் பிடித்தபோது, "அவனைப் பிடித்துச் சிறைச் சாலையில் வைத்து, அவனைக் காக்கும்படி வகுப்புக்கு நான்கு போர்ச் சேவகராக ஏற்படுத்திய நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவித்தான்'' (வ. 4). "வகுப்பு'' என்று மொழிபெயர்க்கப் பட்ட கிரேக்க வார்த்தையானது நான்கு சேவகர் கொண்ட காவல் குழு ஒன்றைக் குறிப்பதாகும்; பேதுருவைக் காவல் செய்யப் படை வீரர்கள் பதினாறு பேர் நியமிக்கப்பட்டார்கள். (நான்கு பேர் கொண்ட ஒவ்வொரு வகுப்பும் மூன்று மணி நேரம் காவல் காக்கும் முறைமையைப் பொறுப்பாய்க் கொண்டதாகும்.) மற்றும் தீவிரமான நிகழ்ச்சிகளில், இரவு நேரத்தில் கைதியுடன் படைவீரர் ஒருவரையும் விலங்கு பூட்டி வைப்பதுண்டு; ஆனால் பேதுருவோடு ஒவ்வொரு மாலை*

*வேளையிலும் பக்கத்திற்கு ஒருவராக இரண்டு படை வீரர்களை அவருடன் விலங்கிட்டு வைத்திருந்தார்கள் (வ. 6). அவ்வகுப்பின் மூன்றாவது படை வீரர் சிறைக்கதவுக்கு வெளியே நின்றார், நான்காவது படை வீரரோ உட்காவ லறைக்கும் வெளிக் கதவுக்கும் இடையே நின்றார் (வ. 10). சிறைச்சாலையின் மற்ற சாதாரணக் காவல் ஏற்பாடுகளுடன் கூடுதலாக இவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மனித நோக்கிலிருந்து பார்க்கையில், பேதுரு தப்பிச் செல்வது என்பது முடியாத விஷயமாயிருந்தது. ஆலோசனை சங்கத்தை நோக்கி ஏரோது ஏளனமாய்ச் சிரித்து, "பேதுருவை நீங்கள் காவலில் வைத்திருந்தது கடினமாயிருந்ததென்று கேள்விப்பட்டேன். அதை எப்படிச் செய்வது என்பதை நான் உங்களுக்குக் காண்பிக்கின்றேன்" என்று கூறுவதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது.*

*யாக்கோபின் கல்லறைக்கு முன்பாகத் துக்கமாய் நிற்பவர் களை நீண்ட நோக்காகப் பார்த்து விட்டு, பிறகு சிறையில் இருக்கும் பேதுருவைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். உங்கள் மனதில் பின்வரும் சிந்தனைகளை அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள்: கிறிஸ்தவர்களுக்குப் பிரச்சனைகள் உண்டு; இந்த வாழ்வில் தீமையானது அடிக்கடி வெற்றியடையவது போலக் காணப்படுகின்றது. இந்த உண்மை நிலைகளை நாம் எதிர்கொள்ள வேண்டும். இவைகள் முதலாம் நூற்றாண்டில் இருந்தன; இன்றும் அவை இருக்கின்றன. ஆயினும் நமது வேதவசனப் பகுதியைத் திருப்பிப் பார்க்கும் போது, நாம் அதிகாரம் 12ல் ஒரு சில வசனங்களை மட்டுமே ஆராய்ந் திருக்கின்றோம் என்று பார்க்கின்றோம். வரலாறு இன்னும் முடிவாகவில்லை! ஒரு கதையில் சதியானது, முதல் ஒரு சில பக்கங்களில் முடிந்து விடாது; கதை எவ்வாறு முடிகிறது என்று காண்பதற்குக் கடைசிப் பக்கம் வரை நீங்கள் தொடர்ந்து படிக்க வேண்டும். பேதுருவினுடையது போலவே உங்கள் சூழ்நிலையும் முடியாததாக இருக்கலாம், ஆனால் தேவன் தமது நிறைவு வார்த்தையை இன்னும் முடிக்கவில்லையே! உங்கள் வாழ்வில் சோதனைகளும், தூண்டுதல்களும் ஏற்படும்போது நீண்ட நோக்கொன்றைக் காணுங்கள். கர்த்தரில் நம்பிக்கையாயிருங்கள்!*

## ஜெபமும் பொறுமையும் (12:5, 6, 12)

*சபையின் மதிப்பு மிக்க முன்னோடி ஒருவர் சிறையில் இருந்தார்; உறுப்பினர்கள் என்ன செய்திருக்க முடியும்? சில சமயங்களில், எப்போதாவது, இந்த நாட்டின் பிரதிநிதிகள், மற்ற நாடுகளில் அரசியல் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு, சிறைவைக்கப்படுகின்றார்கள். இவ்வாறு நடக்கும் போது, நாடு முழுவதும் கோபமடைகின்றது, தங்கள் நாட்டு மனிதர்களை வெளிக் கொண்டு வரச் சிக்கலான பல திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. சபையும் கூட இவ்வித வழிமுறைகளில் முயற்சி செய்திருக்கக் கூடும். கோபச் சொற்கள் புரண்டோ டியிருக்க முடியும்; கிறிஸ்தவ ஆண்கள் எல்லாரும் ஒன்று கூடிச் சிறையைத் தகர்க்கத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்க முடியும். உண்மையில் சொல்லப் போனால், இவ்விதச் செயல் எதுவும், எதையும் சாதித்து விடாது. மனித நிலையில் இருந்து கண்ணோக்கும்போது, அவர்களால் செய்ய முடிந்தது ஒன்றுமேயில்லை.*

*சபையானது ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தபோது, அது என்ன செய்தது? கைகளை உயர்த்தி எழுவதற்குப் பதில், அவர்கள் முழங்கால்படியிட்டார்கள். "அப்படியே பேதுரு சிறைச் சாலையிலே காக்கப்பட்டிருக்கையில், சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள்" (வ. 5). பட்டணத்தில் இருந்த சபையின் உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் கூடி அந்த அப்போஸ்தலருக்காக ஜெபித்தார்கள்; ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இரவும் அவர்கள் தொடர்ந்து ஜெபித்தார்கள் (வ. 12). ஏரோதினால் சிறைச்சாலையின் கதவுகளைப் பூட்ட முடிந்தது, ஆனால் அவனால் பரலோகத்தின் கதவுகளைப் பூட்ட முடியவில்லை.*

*முதல் எண்ணத்தில், சபையாரால் ஏறெடுக்கப்பட்ட ஊக்கமான இந்த ஜெபமானது அவ்வளவாய் மனதில் பதிவதாகத் தோன்றவில்லை; ஆனால் மறுபடியும் அதை நினைத்துப் பாருங்கள். ஜெபத்தில் ஊக்கமாய்த் தரித்திருப்பதற்கு சபையானது அநேக தடைகளை மேற்கொள்ள வேண்டியதாயிருந்தது, நம்பிக்கைக் குலைவு என்ற தடை அங்கிருந்தது. சபையானது யாக்கோபுக்காக ஜெபித்திருக்காது என்று*

*கருதுகின்றீர்களா? யாக்கோபுவைக் கைது செய்து, கொலை செய்த நிகழ்ச்சி எவ்வளவு விரைவாக நடைபெற்றிருந்தாலும், அவருக்காக அநேகர் ஜெபித்திருப்பார்கள் என்பது உறுதி. இருந்தாலும் கூட யாக்கோபு மரணமடைந்தார். "நாம் யாக்கோபுக்காக ஜெபித்தும் தேவன் அவரைக் காப்பாற்ற வில்லையே; இப்பொழுது நாம் எதற்குப் பேதுருவுக்காக ஜெபிக்க வேண்டும்?" என்று அவர்கள் எண்ணியிருத்தல் இயல்பானதேயாகும். பிறகு தாமதம் என்ற தடை அங்கிருந் தது. அவர்கள் குறைந்த பட்சம் ஏழு நாளளவாய்ப் பேதுருவுக் காக ஜெபித்தார்கள் (வ. 6), ஆனால் ஒன்றும் நடைபெற வில்லை. ஜெபிப்பதை விட்டு விடுவதென்பது எவ்வளவு சுலபமானதாய் இருந்திருக்கும்! இவைகளுக்கு மேலாக, உற்சாகக் குறைவு என்ற தடை அங்கிருந்தது. சபையானது ஒன்றுக்குப் பின் ஒன்றாக அடிகள் பலவற்றைப் பெற்றிருந்தது: ஒரு அப்போஸ்தலர் கொலை செய்யப்பட்டிருந்தார்; இன்னொருவர் சிறைச் சாலையில் இருந்தார். உலகத்தின் சக்திகள் யாவும் அவர்களுக்கெதிராக அணிவகுத்து பெலத்து டன் நின்றன. சூழ்நிலையானது தாங்கவே முடியாததாகக் காணப்பட்டது; உற்சாகம் இழந்து போவதென்பது மிகவும் சுலபமானதாயிருந்திருக்கும். ... ஆனால் இன்னமும் அவர்கள் ஜெபித்தார்கள்.*

*அந்த சகோதரர்கள் என்னத்திற்காக ஜெபித்தார்கள் என்று அறிந்து கொள்ள நான் விரும்புகின்றேன். இதற்கு முன்பு ஒரு முறை அப்போஸ்தலர்களைத் தேவன் அற்புத விதமாய் விடுவித்திருந்தார் (5:19, 20), ஆகவே அது மறுபடியும் நடக்க வேண்டுமென்று அவர்கள் ஜெபித்திருக்கலாம். (ஏரோது யாக்கோபுவைச் சிறைப்படுத்தியபோது, அவர் விடுதலை பண்ணப்பட்டிருக்கவில்லை, ஆகவே பேதுரு விடுவிக்கப் படுவார் என்று அவர்களுக்கு உறுதியில்லாதிருந்தது.) இயேசுவை விசாரணைக்குட்படுத்திய வேளையில் பேதுருவின் விசுவாசம் அலைவு பட்டதினால், பேதுரு மரணத்திற்குட் படுத்தப்படும் வேளையில் அவர் விசுவாசத்திலிருந்து விழுந்து விடக்கூடாது என்று அவர்கள் ஜெபித்திருக்கலாம். (இதற்கு மறுபக்கத்தில், பெந்தெகொஸ்தே நாளிலிருந்து, பேதுரு பயப்படவேயில்லை. அவர் வல்லமை வாய்ந்த ஆலோசனைச் சங்கத்தாரால் பயமுறுத்தப்பட்ட போதிலும் அஞ்சவில்லை.*

ஆகவே அவர் விழுந்து போவதென்பது நடக்காததாயிருந்தது.) ஒருவேளை சிலர் ஒரு ஜெபத்தையும், மற்றவர்கள் வேறொரு ஜெபத்தையும் செய்திருக்கலாம். ஒருவேளை சிலர் தாங்கள் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதை அறியாதிருந்ததாக ஒத்துக் கொண்டிருந்திருக்கலாம் (ரோமர் 8:26), ஆகவே இவ்விஷயத்தைத் தேவனுடைய கைகளில் ஒப்புவித்து விட்டிருந்தார்கள். அவர்களுடைய ஜெபத்தின் உள்ளடக்கம் எதுவாயிருந்தாலும், அவர்கள் தங்களின் ஒரே நம்பிக்கை தேவன் மீது மட்டுமே சார்ந்திருந்தது என்பதை அறிந்திருந் தார்கள்.

அவர்கள் ஜெபம் பதில் அளிக்கப்பட்டு, பேதுரு விடுதலை யானதை நாம் காண்பதற்கு முன்பு, சிறையின் வெளிப் புறத்திலிருந்து நமது கவனத்தைச் சிறையின் உட்புறத்திற்கு மாற்றுவோம். வசனம் 6, ‘‘ஏரோது அவனை வெளியே கொண்டு வரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரை பண்ணிக் கொண்டிருந்தான்’’ என்று தொடங்குகின்றது. பேதுரு என்ன நிலையில் நித்திரை பண்ணினார் என்பதைக் கவனியுங்கள். முதலாவதாக, அது அவர் மரண தண்டனை பெறுவதற்கு முந்திய இராத்திரியாகும். ‘‘ஏரோது அவனை வெளியே கொண்டு வரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்திய நாள் இராத்திரியிலே’’ பேதுரு தூங்கிக் கொண்டிருந்ததாக லூக்கா வலியுறுத்தினார். எனது தலை எனது உடலில் இருந்து எடுக்கப்படும் நாளுக்கு முந்திய இரவில் நான் தூங்கிக் கொண்டு இருப்பேனா? சந்தேகம்தான். மேலும் பேதுரு, சிறையில், குளிர்ந்த, கடினமான தரையின் மேல் இரண்டு சேவகர்கள் நடுவிலே, அவர்களுடன் சங்கிலியால் பிணைக்கப் பட்டிருந்ததால் சற்றும் அங்குமிங்கும் நகர முடியாதபடி படுத்து உறங்கிக் கொண்டிருந்தார். எந்த வழியில் பார்த்தாலும் அந்தச் சூழ்நிலை, உறங்குவதற்கு ஏற்றதாயிருக்கவில்லை, ஆனாலும் பேதுரு உறங்கினார். உண்மையில், தேவனுடைய தூதன் அவருடைய விலாவில் தட்டி எழுப்புமளவுக்கு அவர் ஆழ்ந்து உறங்கினார்!

பேதுருவால் எப்படி இவ்விதம் உறங்க முடிந்தது? நிச்சயமாகவே அவர் தேவன் மீது நம்பிக்கையாயிருந்ததால்

தான் இது முடிந்தது. (ஒருவேளை அவர் "முதிர்வயதடைவார்" என்று இயேசு வாக்குத்தத்தம் செய்ததை [யோவா. 21:18] நினைவுகூர்ந்திருக்கலாம்.) என்ன நடந்தாலும் அது தேவனுக்கு மகிமை உண்டாவதாகவே இருக்கும், விஷயம் அவ்வளவே என்று அவர் உறுதியாக நம்பியிருப்பார். ஆகையால், அவரைப் பிடித்து வைத்திருந்த இருவரும், படுக்கைக்கு நேரமாயிற்று என்று கூறியபோது, அவர்களின் நடுவில், குளிர்ந்த தரையின் மீது ஜெபம் செய்துவிட்டு, உறங்கத் தொடங்கினார். தொல்லைகள் நம் வழியில் வந்து, தூக்கம் நம்மை விட்டு நழுவிச் செல்லுகையில், சர்வ வல்லவர் மீது முழு நிறைவான நம்பிக்கை கொள்வதே நமக்குச் சிறந்த தூக்க மருந்து ஆகும். சங்கீதக்காரர், "சமாதானத்தோடே படுத்துக் கொண்டு நித்திரை செய்வேன்; கர்த்தாவே, நீர் ஒருவரே என்னை சுகமாய்த் தங்கப் பண்ணுகிறீர்" (சங். 4:8) என்று எழுதினார். சிறையின் உள்ளேயும், வெளியேயும், பேதுருவுக்கும் மற்றும் சபையாருக்கும் மற்றும் கிறிஸ்தவர்கள் யாவருக்கும் ஜெபமும் பொறுமையுமே பண்புகளாயிருந்தன.

## வல்லமையும் முன்னேற்றமும் (12:6-17, 24)

எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதை நாம் சரியாக அறிந்திராத வேளையிலும், ஊக்கமான ஜெபமும், பொறுமையோடு சகித்திருத்தலும் எப்பொழுதுமே தேவனால் பலனளிக்கப்படுகின்றது. அடுத்த சில வசனங்கள் ஜெபத்தின் வல்லமை பற்றிய மெய் சிலிர்க்கும் வரலாற்றை நமக்குக் கூறுகின்றன:

> ஏரோது அவனை வெளியே கொண்டு வரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரை பண்ணிக் கொண்டிருந்தான்; காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காத்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான்; அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது. அவன் பேதுருவை விலாவிலே தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது (வ. 6, 7).

*வேதாகமத்தின் அற்புதங்களை நம்பாத சிலர், அந்த இருட்டான சிறையறையினுள் என்ன நடந்தது என்பதை "விளக்கிக் கூற" முயற்சி செய்கின்றார்கள். "அவர்கள், 'தூதன்' என்பது வெறுமனே 'ஒரு தூதனை' யே குறிக்கும், அவன் ஒரு மனித செய்தியாளராக இருக்க முடியும். அநேகமாக, கிறிஸ்தவர்கள், காவலன் ஒருவனுக்கு இலஞ்சம் கொடுத்து பேதுருவை சிறையில் இருந்து தப்பிக்கப் பண்ணியிருக்க முடியும் என்கிறார்கள்." என்ன ஒரு மதியீனம்! இப்பொழுது படித்த வசனங்களை மறுபடியும் பாருங்கள். தூதன் வந்தபோது செய்த முதல் செயல், அந்த அறையை வெளிச்சமாக்கியதுதான். பின்பு அத்தூதன் பேதுருவைத் தட்டி எழுப்பி, அவரது கையின் விலங்குகள் கழன்று விழும்படி செய்தார். சிறைச்சாலை யிலிருந்து ஒரு மனிதரை அமைதியாகத் தப்புவிக்க இது ஒரு வழியா? தொடர்ந்து இந்த வரலாற்றை நாம் படிக்கையில், இது, புத்திசாலித்தனமான கிறிஸ்தவர்களால் நன்கு திட்டமிட்டுச் செய்யப்பட்ட சிறைத் தகர்ப்பாக இருந்ததில்லை என்று நாம் காண்போம். "தூதன்" என்ற வார்த்தை "செய்தியாளன்" என்று அர்த்தப்படுவது உண்மையே, ஆனால் "என்னை விடுதலையாக் கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினார்" (வ. 11, 17) என்று கூறுகையில் பேதுரு 100 சதவிகிதம் சரியாகவே கூறினார்.*

*இந்த வரலாற்றில் நகைச்சுவையின் தாக்கத்தையும் காண முடியும். கர்த்தருடைய தூதன் சிறைச்சாலைக்குள் வந்தபோது, பேதுருவை எழுப்புவதற்கும், நகர்வதற்கும் மிகவும் சிரமப் பட்டார். அவர் பேதுருவின் விலாவிலே தட்டி "சீக்கிரமாய் எழுந்திரு" என்று கூறினார். பேதுரு எழுந்து, அரைத் தூக்க மாயிருக்கையில், அவரது கை விலங்குகள் கழன்று தரையின் மேல் விழுந்தன (வ. 7). பிறகு, "தூதன் அவனை நோக்கி: 'உன் அரையைக் கட்டி உன் பாதரட்சைகளைத்[8] தொடுத்துக் கொள்' என்றான். அவன் அந்தப்படியே செய்தான். தூதன் பின்னும் அவனை நோக்கி: 'உன் வஸ்திரத்தைப் போர்த்துக் கொண்டு என் பின்னே வா' என்றான்" (வ. 8). எனது பெண்கள் சிறுமிகளாயிருந்தபோது, அவர்களின் அரைத் தூக்கத்தில் அவர்களுக்கு உடைகளை அணிவிக்க நாங்கள் முயற்சி செய்த நாட்கள் எனது நினைவுக்கு வருகின்றன: "கையை இங்கே விடு … இல்லை இங்கே தலையை நுழைக்க வேண்டும் …*

திரும்பப் படுக்கையிலே விழுந்து விடாதே! ... கண்ணைத் திற! ... ஆம், நான் கூடத் தூங்குகிறேன்! ... இப்பொழுது அடுத்த கையை நுழைக்க முயற்சி செய்யலாம் ...”

தூதன் கூறிய யாவற்றையும் பேதுரு தூக்கக் கலக்கத்திலேயே செய்து முடித்து, பிறகு தூதனைப் பின்பற்றிச் செல்லத் தொடங்கினார், ஆனால் வசனம் 9ல், “தூதனால் செய்யப்பட்டது மெய்யென்று அறியாமல், தான் ஒரு தரிசனங் காண்கிறதாக நினைத்தான்.” எப்பொழுதாவது நீங்கள் விழித்தெழவே விரும்பாத அளவுக்கு இனிமையான கனவு கண்டிருக்கின்றீர்களா? நான் அழகற்ற, அளவு மீறிய விடலைப் பருவத்தில் இருக்கையில், ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு காற்றில் பறக்க முடிவது போல அடிக்கடி கனவு கண்டதுண்டு. உண்மை உலகத்திற்கு மறுபடி விழித்தெழுந்து வருகையில் எவ்வளவு உற்சாகக் குறைவாயிருக்கும்! பேதுரு தமக்குக் காத்திருந்த கொலைத் தண்டனை தனது சிந்தையில் இருந்த நிலையுடன் உறங்கச் சென்றிருந்தார். இப்பொழுதோ அவரைக் காணாத காவலர்களைக் கடந்து அவர் தூக்கத்தில் நடக்கையில் அது அவருக்கு ஒரு கனவுக் காட்சியாகவே தோன்றியது. அவர், “இதுதான் நான் கண்டதிலேயே சிறந்த கனவாகும்! நான் உறக்கத்தை விட்டு எழவே மாட்டேன் என்று நம்புகிறேன்!” என்று அவர் எண்ணியிருப்பார் என்று நான் கற்பனை செய்ய முடிகின்றது.

பேதுருவும் தூதனும் ஒவ்வொரு வாசலாகக் கடந்து வந்தார்கள். “அவர்கள் முதலாங்காவலையும், இரண்டாங்காவலையும் கடந்து, நகரத்திற்குப் போகிற இருப்புக் கதவண்டையிலே வந்தபோது” (வ. 10அ). இந்த இரும்புக் கதவு மிகப் பெரிய அளவுள்ளதாகும்; இதைத் திறக்கப் பலம் வாய்ந்த பல மனிதர்கள் தேவை. (சில அதிகாரிகளின் கூற்றுப்படி, அக்கதவைத் திறக்கவோ அல்லது மூடவோ குறைந்தது இருபத்தைந்து மனிதர்கள் தேவையாயிருந்தனர்.) பேதுருவும் தூதனும் அந்தக் கதவண்டையில் வந்தபோது “அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது” (வ. 10ஆ). “தானாய்” என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தையிலிருந்துதான் “automatic” என்ற ஆங்கில வார்த்தை பெறப்பட்டுள்ளது. அந்தப் பெருங்கதவு அவர்களுக்கு முன்பாக அமைதியாகத் தானாகவே திறவுண்டது.

பேதுரு விடுவிக்கப்பட்டதில் குறைந்த பட்சம் ஏழு வித்தியாசப்பட்ட அற்புதங்களை நான் எண்ணுகின்றேன்: (1) தூதன் தோன்றினார், (2) அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது, (3) சங்கிலிகள் விழுந்தன, (4) பேதுருவுடன் கட்டப்பட்டிருந்தவர்கள் விழித்தெழவில்லை, (5) முதலாம் காவலன் அறியாமல் அவனைக் கடந்து சென்றார்கள், (6) இரண்டாம் காவலன் அறியாமல் அவனைக் கடந்து சென்றார்கள், (7) வெளி வாசற் கதவு தானாய் திறவுண்டது. இந்த ஏழு அற்புதங்களுடன் மற்ற சில செயல்களும் சேர்க்கப்படலாம்: மற்ற வாசல்கள் திறக்கப்படுதல், சிறைச்சாலையின் மற்ற சாதாரணமான பாதுகாப்புகளைக் கடந்து செல்லுதல், முதலியன. எண்ணிக்கை இங்கு முக்கியமானதல்ல. தேவன் தமது மக்களின் வேண்டுதலைக் கேட்டார் - அவர்கள் கற்பனை செய்துகூட பார்க்க முடியாத வகையில் அவர்களுக்குப் பதில் அளித்தார் - என்பதே முக்கியமானதாகும்.

வெளிவாசற் கதவு திறந்தவுடன், பேதுருவும் தூதனும் அதைக் கடந்து ''ஒரு வீதி நெடுக நடந்து போனார்கள்'' (வ. 10இ). ''அவர்கள் ஒரு கட்டடப் பகுதி வரைக்கும் சென்றிருந்தார்கள்'' (Cotton Patch Version of Luke and Acts [Clarence Jordan]). அப்போது, "உடனே தூதன் அவனை விட்டுப் போய் விட்டான்" (வ. 10ஈ). பேதுரு திகைத்து நின்றார். பிறகு, இரவின் குளிர்ந்த காற்று அவரது முகத்தில் பட்டது. அவர் தம்மைச் சுற்றியிருந்த வீடுகளையும், மேலே ஆகாயத்தையும் நட்சத்திரங்கள் நிறைந்திருப்பதையும் பார்த்து உணர்வு பெற்றார். "பேதுருவுக்குத் தெளிவு வந்தபோது: ஏரோதின் கைக்கும் யூத ஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன்" என்றான் (வ. 11).

அவ்விடத்தில் தூதன் அவரை விட்டுச் சென்றது ஏன்? ஏனென்றால், நம்மால் செய்யக் கூடிய செயல்களைத் தேவன் நமக்காகச் செய்வதில்லை. பேதுரு இப்போது சுயாதீனமாயிருந்தார். அவர் செயல்பாட்டுத் திட்டமொன்றை வகுத்துக் கொண்டார்: முதலில் தாம் விடுதலையாக்கப்பட்டதைச் சகோதரர்களுக்கு அறிவிக்க வேண்டும், பிறகு தாம் ஒளிந்து கொள்வதற்கு ஒரு இடத்தைக் கண்டு பிடிக்க வேண்டும்.[9]

*"அவன் இப்படி [தாம் உண்மையிலேயே தேவனால் விடுவிக்கப்பட்டதை] நிச்சயித்துக் கொண்டு மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானுடைய[10] தாயாகிய மரியாள் வீட்டுக்கு[11] வந்தான்;" (வ. 12அ).* பேதுரு அந்த வீட்டிலே அதிக நேரத்தைச் செலவிட்டிருந்ததற்கு காரணம், அது நள்ளிரவு நேரமாயிருந்தாலும் அங்கு அநேக கிறிஸ்தவர்களைக் காண முடியும் என்பதே அவரது நிச்சயமாகும். (அவர் நினைத்தது சரியே, ஏனென்றால் அந்த வீட்டிலே *"அநேகர் கூடி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள்"* [வ. 12ஆ].) அப். நட. புத்தகத்தின் பிற்பகுதியில் ஒரு முக்கிய பாத்திரமாய் விளங்கும் யோவான் மாற்கு இவ்விடத்தில் சாதாரணமான முறையில் அறிமுகப் படுத்தப்படுவதைக் கவனியுங்கள். பேதுருவே இந்த யோவான் மாற்குவை மனமாற்றியிருப்பார் என்பது உறுதி, ஏனென்றால் பின்னாளில் மாற்குவை அவர் தமது ஆவிக்குரிய "குமாரன்" என்று குறிப்பிட்டார் (1 பேது. 5:13).

எருசலேமின் இருண்ட வீதிகளின் வழியே பேதுரு விரைந்து சென்றபோது, அவர் இன்னமும் அபாயத்தில்தான் இருந்தார். கடைசியாக, அவர் மரியாளின் வீட்டை அடைந்தார். *"பேதுரு வாசற் கதவைத் தட்டின போது, ரோதை* (ரோதை என்றால் சிறு ரோஜா என்று அர்த்தம்) *என்னும் பேர் கொண்ட ஒரு பெண் ஒற்றுக் கேட்க வந்தாள்" (வ. 13).* ஏரோது, சபையின் உறுப்பினர்களை *"துன்பப்படுத்துவதற்காக" (வ. 1)* அவர்கள் மீது கை வைத்துக் கொண்டிருந்ததால், நள்ளிரவில் கதவைத் தட்டுதல் என்றால், உள்ளே இருப்பவர்களைக் கைது செய்ய ரோமப் படைவீரர்கள் வெளியே காத்திருந்தார்கள் என்று அர்த்தமாகக் கூடும். ரோதை கதவினூடே *"யார் அது?"* என்று இரகசியமாய்க் கேட்டிருப்பாள். பயந்த குரலில் பேதுரு, *"இது பேதுரு! நான் உள்ளே வரட்டும்! சீக்கிரம்"* என்று பதில் கூறியிருப்பார் என்பதை நான் கற்பனை செய்ய முடிகின்றது.

லூக்கா தரும் விபரத்தில் மறுபடியும் நகைச்சுவையுணர்வு நிரம்பியுள்ளது, இது ஆதி கிறிஸ்தவர்களும் நம்மைப் போன்ற மனிதர்களே என்பதை அவர் வெளிப்படுத்துகையில் காணப்படுகின்றது. *"அவள் [ரோதை] பேதுருவின் சத்தத்தை அறிந்து சந்தோஷத்தினால்[12] கதவைத் திறவாமல்" (வ. 14அ).* அப்போஸ்தலரை வெளியே நிற்கும்படி விட்டுவிட்டு அவள் *"உள்ளேயோடி, பேதுரு வாசலுக்கு முன்னே நிற்கிறார் என்று*

அறிவித்தாள்" (வ. 14ஆ). ஜெபக்கூட்டத்தினுள்ளே செல் வதைப் பார்க்கிலும், சிறையிலிருந்து வெளியேறுவது பேதுரு வுக்கு எளிதாய் இருந்தது!

தேவன் தங்களின் ஜெபங்களுக்குப் பதில் அளித்தார் என்ற செய்திக்கு மரியாளின் வீட்டில் இருந்தவர்கள் எவ்வித பதில் செயல் செய்திருப்பார்கள்? அவர்கள் எதற்காக ஜெபித்தார்கள் என்பதை சரியாக நாம் அறிவதில்லையென்று முன்னமே நான் யோசனை தெரிவித்திருந்தேன். பேதுரு விடுதலையாக வேண்டும் என்பதற்குப் பதிலாக வேறு எதற்காகவாவது அவர்கள் ஜெபித்திருந்தால், தேவன் அவர்கள் எதற்காக ஜெபித்தார்களோ அதைக் காட்டிலும் சிறந்த ஒன்றைக் கொடுத்து அவர்களுக்குப் பதில் அளித்திருந்தார். அதை ஒருவர் பார்க்கும் விதம் எப்படியிருப்பினும், தேவன் அவர்களின் ஜெபத்தை அற்புதமான வழிமுறையில் கேட்டுப் பதில் அளித்தார்! அவர்களின் பதில்செயல் பற்றி வசனம் 15ல் கூறப்படுகின்றது: "அவர்கள், 'நீ பிதற்றுகிறாய்' என்றார்கள்." இவர்கள் என் சகோதரர்கள்தானா என்று அறிவதற்கு வேறு வழி இல்லையென்னும்போது, இந்த நிகழ்ச்சியில் இவர்களின் பதில்செயலானது இவர்கள் என் சகோதரர்கள்தான் என்று நான் நம்பும்படி செய்கின்றது என்று அடிக்கடி நான் (நகைச்சுவையாக) கூறுவதுண்டு: அவர்கள் தேவனிடத்தில் ஜெபித்தார்கள், ஆனால் தேவன் அவர்களின் ஜெபத்தைக் கேட்டு பதில் அளித்த பொழுது அவர்கள் ஆச்சரியப் பட்டார்கள்!

அவர்களுடைய (அடிக்கடி நம்முடையதுமாக உள்ள) பதில் செயலானது எனக்கு ஒரு பழைய கதையை நினைவூட்டு கின்றது. ஒரு சிறு நகரத்தில் முதல் மதுக் கடையை ஆரம்பித்து நடத்துவதற்கு ஒரு மனிதர் உரிமை பெற்றார். அங்கிருந்த உள்ளூர் சபையார் இந்த மதுக் கடைக்கு பலத்த எதிர்ப்புத் தெரிவித்தார்கள், எனவே தேவன் அதில் இடையிட வேண்டும் என்று அவர்கள் ஜெபிக்கத் தொடங்கினார்கள். அந்த மதுக் கடை திறக்க நியமித்திருந்த நாளுக்குச் சில நாட்கள் முன்னதாக, அந்தக் கட்டிடத்தை மின்னல் தாக்கி அதை எரித்துத் தரைமட்டமாக்கியது. சபையிலிருந்த மக்கள் இதைக் குறித்து அதிசயப்பட்டார்கள் ஆனாலும் மகிழ்ச்சியடைந்தார் கள் - ஆனால் கடையின் உரிமையாளர், சபையார் மீது வழக்குத்

தொடுத்துள்ளதாக அவர்கள் ஒரு அறிவிப்பைப் பெற்றார்கள். அந்தக் கட்டிடம் எரிந்து சாம்பலானதற்குக் காரணம் அவர்களின் ஜெபங்கள்தான் என்று அக்கட்டிட உரிமையாளர் உறுதியாக நம்பினார். அவர்களோ அந்தக் குற்றச்சாட்டை மறுத்தார்கள். முதல் நிலை விசாரணையின் முடிவில், நீதிபதி யானவர், "இந்நிலையில் எனது முடிவு எப்படியிருக்கும் என்று நான் அறியவில்லை, ஆனால் சபையின் மக்கள் ஜெபத்தின் வல்லமையை நம்பவில்லை என்பதும், மதுக் கடையின் உரிமையாளர் ஜெபத்தின் வல்லமையை நம்புகின்றார் என்பதும் தெளிவாய்க் காணப்படுகிறது" என்று உறுதிபடக் கூறினார்.

வீட்டில் இருந்த மற்றவர்கள் தேவ நம்பிக்கையில்லாமல் போனது பற்றி ரோதை தன்னம்பிக்கை இழக்கவில்லை. அவள், பேதுரு வாசலருகே நிற்கின்றார் என்று "உறுதியாய்ச் சாதித் தாள்" (வ. 15அ). கடைசியில் அங்கு யாரேனும் ஒருவர் (அல்லது ஏதேனும் ஒன்று) அங்கு நின்றிருப்பதை அவர்கள் ஒப்புக் கொள்ளும்படி வற்புறுத்தப்பட்டனர் - இது நம்பத் தகாத ஒரு "விளக்கம்" கூற காரணமாயிற்று: "அது அவருடைய தூதனா யிருக்கலாம்" (15ஆ). ஒரு தூதன் கதவை ஏன் தட்ட வேண்டும்? இவர்களின் இந்த விநோதமான கூற்றுக்கு J.W. மெக்கார்வி அவர்களின் விளக்கமானது மற்ற எந்த விளக்கத்தையும் போலவே நல்லதாய் இருக்கின்றது:

> அவரைக் காணும் முன்பு, அது அவரது தூதனாயிருக்கலாம் என்ற அவர்களுடைய எண்ணமானது உண்மையில், வேதாகமக் கருத்தின் அடிப்படையில் [மத். 18:10; எபி. 1:14] அமைந்ததான ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு தூதர் உண்டு என்ற கருத்தின் கருதுகோள் ஆகும், மற்றும் சில வேளைகளில் இந்தத் தூதன் தனது காவலில் உள்ளவர்களின் குரல் மற்றும் உருவம் ஆகியவற்றைத் தான் வெளிக்காட்டுவதுண்டு என்ற மூட நம்பிக்கையும் (சந்தேகமின்றி இது மூட நம்பிக்கையே) நிலவி வந்தது.

அப்படியானால், சபையானது பேதுருவை யாருமறியாமல் சிறையிலிருந்து பதுங்கி வெளியேற்ற விரிவான திட்டம் தீட்டியது என்று இது கூறுகின்றதா? அவர் சிறையிலிருந்து வெளி வர முடியும் என்று அவர்கள் நம்பவில்லை, அது நடந்த போது, அதை அவர்களால் நம்ப முடியவில்லை!

இந்த வேளையெல்லாம் பேதுரு, ''பின்னும் தட்டிக் கொண்டிருந்தான்'' (வ. 16அ). கடைசியாக, உள்ளிருந்தவர்கள் அவர் தட்டியதைக் கேட்டார்கள். (இவ்வேளையில் பேதுரு அநேகமாக கதவைப் பலமாகத் தட்டியிருக்க வேண்டும்), அது யாரென்று பார்க்கச் சென்றார்கள். "அவர்கள் திறந்தபோது அவனைக் கண்டு பிரமித்தார்கள்" (வ. 16ஆ). "அவர்கள்" என்ற பன்மை வார்த்தையைக் கவனியுங்கள். அவர்களின் உரை யாடலை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது: "நீ போய் யாரென்று பாரேன்"; "இல்லை, நீ போயேன்." கடைசியாக அவர்கள் யாவரும் ஒன்று கூடிச் செல்ல முடிவு செய்தார்கள். அவர்கள் ஒன்றாக சேர்ந்து, பயத்துடன் கதவருகில் சென்று, அதைத் திறந்ததை என்னால் காண முடிகின்றது. அவர்கள் உண்மையிலேயே பேதுருதான் அங்கே நின்றார் என்று கண்டு, "பிரமித்தார்கள்"!

அவர்கள் உரத்த சந்தோஷக் குரலுடன் ஆர்ப்பரித்திருக்கக் கூடும், ஏனென்றால் "அவர்கள் பேசாமலிருக்கும்படி அவன் கையமர்த்தி" (வ. 17அ) என்று வாசிக்கின்றோம். ஏற்கனவே அதிகம் சத்தம் போட்டாயிற்று; பேதுரு தப்பிவிட்டார் என்பதை அருகாமையிலிருக்கும் யூதர்கள் அறிந்து கொள்ளச் செய்வது ஞானமற்ற செயலாகும். பின்பு பேதுரு, "கர்த்தர் தன்னைக் காவலிலிருந்து விடுதலையாக்கின விதத்தை அவர்களுக்கு விவரித்து" (வ. 17ஆ). திகைப்பூட்டும் அற்புதம் ஒன்றுக்கு பேதுருவே கண் கண்ட சாட்சியாய் இருந்தார் என்ற அவருடைய சந்தேகமற்ற இம்மன நிலையை, இன்றைய நாளில் தேவ நம்பிக்கையற்றவர்களால் எதிர்த்து நிற்க முடிவதில்லை.

பேதுரு, "இந்தச் செய்தியை யாக்கோபுக்கும், சகோதர ருக்கும் அறிவியுங்கள்"[13] (வ. 17இ). இந்த யாக்கோபு அப்போஸ் தலரல்ல (அவர் ஏற்கனவே கொல்லப்பட்டு விட்டார்), ஆனால் இவர் கர்த்தருடன் பிறந்த அரை சகோதரராகிய (இயேசுவும் யாக்கோபும் ஒரே தாய்க்கு [மரியாள்], வித்தியாசப்பட்ட தகப்பனார்களைக் கொண்டு [யாக்கோபின் தகப்பன் யோசேப்பு; இயேசுவின் தகப்பன் தேவன்] பிறந்தவர்கள்). யாக்கோபு ஆவார், இவர் எருசலேமிலிருந்த சபையின் ஒரு முன்னோடியானார் (15:13; 21:18; கலா. 2:9). இவரும், மற்றவர்களும் பட்டணத்தின் மற்ற பகுதிகளில் ஜெபக் கூட்டங்களில் இருந்திருக்கலாம். அப்போஸ்தலரல்லாதவர்

களைப் பேதுரு குறிப்பிடுவதற்கு, மற்ற அப்போஸ்தலர்கள் எருசலேமில் இல்லாதிருந்தார்கள் என்பது ஒரு காரணமா யிருந்திருக்கலாம். உபத்திரவம் எழும்பின வேளையில் அநேகமாக அவர்கள் பிரசங்கப் பயணங்களில் இருந்திருக் கலாம் அல்லது உபத்திரவம் தொடங்கிய வேளையில் அவர்கள் தங்களை ஒளித்துக் கொண்டிருந்திருக்கலாம்.

மரியாளின் வீட்டிற்குச் சென்றதன் நோக்கத்தை நிறை வேற்றிய பிறகு, பேதுரு, "புறப்பட்டு, வேறொரு இடத்திற்குப் போனான்" (வ. 17ஈ). மரியாளின் வீடானது கிறிஸ்தவர்கள் கூடுமிடம் என்று நன்கறியப்பட்டதாகவும், பேதுரு தப்பித்துச் சென்றது அறியப்படும்போது, படை வீரர்கள் தேடி வரும் முதல் இடமாகவும் இருந்திருக்கலாம். ஆகவே அவர் "வேறொரு" இடத்திற்கு"ப் போக வேண்டியது அவசியமா யிற்று. அந்த "இடத்தை"ப் பற்றி[14] அநேக கருதுகோள்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன, ஆனால் அது எந்த இடம் என்று லூக்கா கூறவில்லையாதலால், அதைக் குறித்து யூகித்துக் கொண்டிருப்பது பயனற்றதாகும். லூக்கா அவ்விடத்தை அறிந்தும், அதைப் பதிவு பண்ணாமல் இருக்கும்படி தேர்ந்து கொண்டார் என்பது, இன்னொரு உபத்திரவம் நேர்ந்தால் கிறிஸ்தவர்களுக்கு இன்னமும் அவ்விடம் தேவைப்படும் என்று ஒருவேளை அவர் அறிந்திருக்கலாம்.

லூக்காவினால் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, இது பேதுருவின் வாழ்வில் நடந்த கடைசி முக்கிய நிகழ்ச்சியாக இருக்கின்றது. இந்த இடத்திலிருந்து, லூக்கா, சவுல்/பவுலின் ஊழியத்தின் மீது கவனம் செலுத்தினார்.

வசனங்கள் 18 முதல் 24 வரையிலும் உள்ள பகுதியானது, பேதுரு விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சி களை எடுத்துரைக்கின்றது. வசனம் 18, "பொழுது விடிந்த பின்பு பேதுருவைக் குறித்துச் சேவகருக்குள்ளே உண்டான கலக்கம் கொஞ்சமல்ல" என்று கூறுகின்றது. லூக்காவின் வார்த்தைகள் ஒரு மேம்பட்ட அடக்கிக் கூறுதலாகும். பேதுருவோடு கட்டப்பட்டிருந்த படை வீரர்கள் எழுந்து பார்த்தபோது, பேதுரு அங்கு இல்லாதிருந்தது குறித்து அவர்களின் நம்பிக்கையின்மையை உங்களால் கற்பனை செய்ய முடிகின் றதா? குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்படுகையில் எல்லாத் திசைகளிலும் இருந்து விரல்கள் அவர்களை நோக்கிச்

சுட்டிக்காட்டப்பட்டிருக்கும்: "நீங்கள் நன்றாகத் தூங்கியிருப் பீர்கள்"; "இல்லை, அவன் தப்பிச் செல்லும்படி அனுமதித்ததே நீங்கள் தான்." வசனம் 19, பேதுரு தப்பிச் சென்றதை ஏரோது கேள்விப்பட்ட போது, அவன் அந்தப் படை வீரர்கள் அனை வரையும் கொல்லும்படி உத்தரவிட்டான் என்று குறிப்பிடு கின்றது. படை வீரர் யாருக்கும் இலஞ்சம் கொடுக்கப்பட வில்லை - ஏனென்றால் கைதியைத் தப்பிக்க விட்டால் அதன் விளைவு என்னவாகும் என்பதை ஒவ்வொரு படை வீரரும் அறிந்திருப்பார் என்பதற்கு இது இன்னொரு ஆதாரம் ஆகும்.

நமது அடுத்த பாடத்தில் நாம் இவ்வரலாற்றின் எஞ்சிய பகுதியைப் படிப்போம். ஆயினும், முடிப்பதற்கு முன்பு வசனம் 24 ஐக் கவனிக்க விரும்புகின்றோம். ஏனெனில் பேதுரு தப்பிச் சென்ற வரலாற்றின் உச்சகட்டமாகச் சரியாக இவ் வசனம் பொருந்துகின்றது: "தேவ வசனம் வளர்ந்து பெரு கிற்று." வசனம் வளர்ந்து பெருகும்போது, அதற்குரிய பதில் செயலும் வளர்ந்து பெருகிற்று என்பதே இங்கு மறைமுகமான கருத்தாகும். மீண்டும் ஒருமுறை சபையை அழிக்கச் சாத்தான் மேற்கொண்ட முயற்சிகள் முறியடிக்கப்பட்டன; கிறிஸ்தவர்களின் குரல்கள் அமைதிப்படுத்தப்படுவதற்குப் பதிலாக, அவைகள் பலமாக வளர்ந்தன. சபையானது தைரியத் திலும் எண்ணிக்கையிலும் அதிகமாய் வளர்ந்தது. நாம் ஜெபிக்க வேண்டிய பிரகாரம் ஜெபித்தால், நாமும் கூட நாம் விரும்பிய பிரகாரம் வளர முடியும்.

## முடிவுரை

நீங்கள் ஒன்றுமே செய்ய முடியாது என்ற (தெளிவான) நிலையில் நீங்கள் செய்ய முடிவது ஜெபம் செய்தல்தான் என்பதை இப்பாடத்தில் நான் ஆலோசனையாகக் கொடுத் திருக்கிறேன். முழங்காலில் இருந்து, உங்கள் இருதயத்தைத் தேவனிடம் ஊற்றுங்கள், அவரது வல்லமையுள்ள கரங்களில் யாவற்றையும் ஒப்புவியுங்கள். ஆயினும் முடியாத சூழ்நிலை களில் மட்டுமே ஜெபம் செய்ய வேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்துவதில்லை, அதாவது உங்களிடத்தில் உள்ள மற்ற எல்லா சாத்தியக் கூறுகளும் உங்களால் செலவிடப்பட்ட பின்புதான் ஜெபம் செய்ய வேண்டும் என்ற கருத்தை நான்

இங்கு கூற வரவில்லை. எந்த ஒரு அறைகூவலையும் எதிர் கொள்ளத் தொடங்கும்போது, ஜெபத்துடன் அதைத் தொடங்க வேண்டும், தொடர்ந்து ஜெபிக்க வேண்டும், ஜெபத்துடன் முடிக்க வேண்டும். ஆதி சபையாரின் வாழ்வு முழுவதும் ஜெபத்தில் தோய்ந்திருந்தது; நமது சொந்த வாழ்வும் ஜெபத்தில் தோய்ந்திருக்க வேண்டும்.

ஜெபத்தைப் பற்றி நாம் தவறவிடக் கூடாத நிறைவான ஒரு பாடம் அதிகாரம் 12ல் உள்ளது - தேவன் யாவற்றையும் சிறந்த முறையில் அறிந்தவராகையால், தேவன் நமக்கு என்ன விதத்தில் பதில் கொடுத்தாலும் நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். "பேதுருவைக் கொலைத் தண்டனையிலிருந்து காத்த தேவன், யாக்கோபை ஏன் காக்கவில்லை?" என்ற கேள்வியுடன் மாபெரும் மனங்கள் போராடுகின்றன. அது தேவனுடைய திட்டமும் நோக்கமும் ஆகும் என்பது இதற்கொரு பதிலாக இருக்க முடியும். யாக்கோபின் மரணம் அதிக அனுகூலமான தாகவும்[15] பேதுருவின் விடுதலையானது அதிகம் நல்லது செய்யக் கூடியதாகவும் இருந்திருக்க வேண்டும். இந்தப் பதிலானது சந்தேகத்திற்கிடமின்றி சரியானதாய் இருக்கின்றது, ஆனால் இதைக் குறித்துச் சிந்திக்க நான் உங்களுக்கு வேறு சிலவற்றையும் தருகின்றேன்: ஒருவேளை நாம் தவறான கேள்வியைக் கேட்கலாம். ஒருவேளை நாம், "யாக்கோபு, தேவனிடத்திற்குச் சென்ற முதலாவது அப்போஸ்தலர் என்ற கனத்தைப் பெறுகையில், தேவனுடைய சந்நிதானத்தின் முன்பு படைக்கப்படுவதற்குப் பேதுரு அநேக வருடங்கள் இன்னமும் காத்திருக்க வேண்டியதாயிருந்தது ஏன்?" நாம் இக்கேள்வியைக் கேட்கும் வழிமுறையானது, தேவன் நிகழ்ச்சிகளைப் பார்க்கும் விதத்தில் நாம் பார்க்கவில்லை என்பதற்கு ஆதாரமாக இருக்கின்றது. சங்கீதக்காரர், "கர்த்தருடைய பரிசுத்தவான் களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது" (சங். 116:15) என்று கூறினார். அரண்மனைக்கு வெளியே கடுமையான வெய்யிலில் உழைத்துக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டமொன்றைக் கற்பனை செய்யுங்கள். அவ்வப்போது அரண்மனையின் கதவு திறக்கப்படுகின்றது, அப்படித் திறக்கப்படும் ஒவ்வொரு முறையும் இந்த மக்கள் கூட்டத் திலிருந்து ஒவ்வொருவராக உள்ளே நுழைகின்றனர். வெளியில் இருப்பவர்கள், அரண்மனைக்குள் செல்பவருக்காகப் புலம்பு

*வதில்லை; மாறாக அவர்கள் தங்களுக்காக புலம்புவார்கள். ஒவ்வொருவரும் "அது ஏன் நானாக இருக்கக் கூடாது?" என்று கேட்பார்கள். எனது கருத்து என்னவென்றால், (யாக்கோபின் விஷயத்தில் போல) தேவன் நமது ஜெபங்களுக்கும் "இல்லை" என்று தெளிவாகப் பதில் கொடுத்தாலும் சரி, அல்லது (பேதுருவின் விஷயத்தில் போல) "ஆம்" என்று பதில் கொடுத் தாலும் சரி, அந்தச் சமயத்தில் நாம் அதைக் காண முடிந்தாலும், முடியாவிட்டாலும் ஒவ்வொரு பதிலுமே மிகவும் சரியானது தான்.*

*நாம் கர்த்தரில் நம்பிக்கையாயிருக்கவும், "இடைவிடாமல் ஜெபம் பண்ணவும்" கற்றுக் கொள்வோம் (1 தெச. 5:17).*

## காட்சி-உதவிக் குறிப்புகள்

*இப்பாடத்தை நான் வகுப்பறையில் பயன்படுத்தும்போது, ஒரு எளிய விளக்கத் தொடரை நான் கரும்பலகையில் வரைவதுண்டு. முதலாவதாக, நான் ஒரு சிறைச்சாலையை வரைந்து, பேதுருவை விடுதலையிலிருந்து பிரித்து வைத்து தடைகளைச் சுட்டிக்காட்டி, தப்பிச் செல்லுதல் என்பது மனித இயல்பில் முடியாதது என்பதை வலியுறுத்துவதுண்டு.*



*முதலாம் காவல் — இரண்டாம் காவல் — இரும்புக் கதவு*

*முதலாம் காவல், இரண்டாம் காவல், இரும்புக் கதவு. அடுத்து, நான் மரியாளின் வீட்டை வரைந்து, கிறிஸ்தவர்கள்*

அங்கு கூடியிருப்பதையும், பேதுருவை எவ்விதம் விடுதலை செய்ய முடியும் (சிறைத் தகர்ப்பின் மூலமா அல்லது வேறு ஏதாவது செய்தா) என்று விவாதிப்பதைச் சுட்டிக் காட்டுவதுண்டு.



நிறைவாக நான், (1) கிறிஸ்தவர்கள் தேவனிடத்தில் ஜெபிக்கச் சென்றார்கள், (2) தேவன் பேதுருவை விடுதலை செய்ய ஒரு தூதனை அனுப்பினார், (3) பேதுரு மரியாளின் வீட்டிற்குச் சென்றார், (4) அங்கு உள்ளே நுழைவது அவருக்குக் கடினமாயிற்று என்பவைகளைக் குறிப்பிடுவதுண்டு.



*இந்த எளிய காட்சிகள் ஒரு ஃபிளானல் போர்டு அல்லது பெருஞ்சித்திரம் போன்ற முறைகளிலும் தழுவியமைக் கப்பட்டு விளக்கப்படலாம்.*

## ❧ பிரசங்கக் குறிப்புகள் ❧

*1 பேதுரு 3:12ஐ எழுதியபோது அவர் அற்புதமாய் விடுவிக்கப்பட்ட நிகழ்ச்சி பேதுருவின் சிந்தையில் இருந்திருக்கக் கூடும் என்று வாரன் வயர்ஸ்ப் அவர்கள் ஒரு ஆலோசனையை முன் வைக்கின்றார். அப். 12ஐச் சுருக்கிக் கூற வயர்ஸ்ப் அவர்கள் இந்த வசனத்தின் வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றார்: (1) தேவன் நமது துன்பங்கள் எல்லா வற்றையும் பார்க்கின்றார் (வ. 1-4): "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது." (2) தேவன் நமது ஜெபங்களைக் கேட்கின்றார் (வ. 5-17): "அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது." (3) தேவன் நமது விரோதிகளிடத்தில் கிரியை செய்கின்றார் (வ. 18-25): தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமா யிருக்கிறது."*

---

குறிப்புகள்

*[1]முதலாம் ஏரோது அகிரிப்பா கி.பி. 44ல் மரித்தான், எனவே எருசலேமில் இருந்த சபையை அவன் கி.பி. 43ல் அல்லது 44ன் தொடக்கத்தில் உபத்திரவப்படுத்தி யிருக்கலாம். (கி.பி. 44 ஜனவரி - ஏப்ரல் மாதங்களில் இது நடைபெற்றிருக்கும்.) அந்தியோகியாவிலிருந்து "அந்தக் காலத்தில்" உதவி வந்திருந்தால், அந்தியோகியா வில் இருந்த சீஷர்கள், பஞ்சம் வருவதற்கு முன்னமே உதவியை அனுப்பியிருக்க வேண்டும். (பஞ்சத்தின் விபரம் பற்றி முந்திய பாடத்தில் காணவும்.) [2]யாக்கோபும், பேதுருவும் மட்டுமே சிறையில் அடைக்கப்பட்டனர் என்று அநேகர் கருது கின்றனர்; ஆனால் மொழியின் நேரடிப் பொருளை எடுத்தாளும்போது, சபையின் மற்ற உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டதாகக் காணப்படுகின்றது. அப்படி நடந்திருக்குமென்றால், அவர்கள் யார், அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது நமக்குத் தெரியாது. [3]லூக்காவின் கட்டுப்பாடானது அவர் ஏவப்பட்டார் என்ப தற்கு நிரூபணமாயுள்ளது. மனிதன் எழுதுவதுபோல தேவன் எழுதவில்லை. மனிதன் ஆர்வத்தைத் திருப்திப்படுத்த எழுதுகிறான்; தேவனோ, ஆத்துமாக்களை இரட்சிக்கத் தேவையானவற்றை மட்டுமே எழுதுகின்றார். [4]பேதுருவும், யோவானும் அதில் மற்ற இருவராயிருந்தனர். [5]யாக்கோபு மரித்தபோது, அவருக்குப் பதில் வேறொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற சுட்டிக்காட்டுதலை நாம் காண்பதில்லை. "அப்போஸ்தலர் பரம்பரை" என்ற ஏதொன்றையும் புதிய ஏற்பாடு*

போதிப்பதில்லை. [6]KJVயில் "after *Easter*" என்ற வினோதமான "மொழிபெயர்ப்பு" உள்ளது, ஆனாலும் கிரேக்க மொழியில் "பஸ்கா" என்பதற்குரிய வார்த்தையே காணப்படுகின்றது, இவ்வார்த்தைக்கான மொழிபெயர்ப்பு KJVயின் மற்ற எல்லா இடங்களிலும் "Passover" என்றுதான் இருக்கின்றது. இத்தவறான மொழிபெயர்ப்பைச் சிலர் ஆங்கில நாட்காட்டியில் பஸ்கா பண்டிகையைக் குறிப்பிடப் பயன்படுத்துகின்றார்கள். இது உண்மை யென்றால், "Passover" என்றோ அல்லது "Easter" என்றோ சீராக அவர்கள் மொழிபெயர்க்காதது ஏன்? மொழிபெயர்ப்பாளர்களின் நோக்கத்தை நாம் அறிவதில்லை; ஒருவேளை அவர்களின் நாட்களில், மனிதர்களால் உண்டாக்கப்பட்ட ஈஸ்டர் பண்டிகையானது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாயிருந்து, அவ்வார்த்தையை அவர்கள் வேதாகமத்தில் உள்ளடக்க விரும்பியிருக்கலாம். [7]இந்தச் சிறைச்சாலை அநேகமாய் அந்தோனியோ கோட்டைக்குள் இருந்திருக்கலாம் (21:34; 22:24). "அப். நட. 1" இதழில் எருசலேமின் வரைபடத்தைப் பார்க்கவும். [8]"பாதரட்சைகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது அடிப்பாகமும், கட்டும் கயிறும் இணைந்த சாதாரணப் பாதரட்சையைக் காட்டிலும் சற்று கனமானதைக் குறிக்கின்றது. இப்படிப்பட்ட மிதியடியை அணிந்து கொண்டு சிறையின் கடினமான தரையில் நடப்பது கணிசமான சப்தத்தை உண்டாக்கும். சாதாரண சிறையுடைப்பு நிகழ்ச்சி நடைபெறவில்லை என்பதற்கு இது மற்றுமொரு சிறிய ஆதாரம் ஆகும். [9]அப். 5ல், அப்போஸ்தலர்கள் அற்புத விதமாக சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட போது, தூதன் அவர்களைத் தேவலாயத்தில் சென்று பிரசங்கிக்கும்படி கூறியிருந்தான். இச்சமயம் அவ்வித அறிவுரை எதுவும் கொடுக்கப்படவில்லை. அற்புத விதமான இந்த விடுவித்தலானது பேதுருவின் உயிரைக் காப்பதற்காகவே நடந்தது என்பது தெளிவான நோக்கமாகும். ஆகையால், பேதுரு ஒளிப்பிடத்திற்குச் செல்ல முடிவு செய்தார். [10]வேதாகமத்தின் அநேக பாத்திரங்களைப் போலவே, யோவான் மாற்குவும் ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்களைப் பெற்றிருந்தார். "யோவான்" என்பது அவருடைய எபிரெயப் பெயராகவும், "மாற்கு" என்பது அவரது ரோம (லத்தீன்) பெயராகவும் இருந்தது.

[11]இது "மரியாளின் வீடு" என்று அழைக்கப்பட்டதால், மரியாள் ஒரு விதவையாக இருந்திருக்கலாம். சில விளக்கவுரையாளர்கள், இயேசுவும் அவரது சீஷர்களும் பஸ்காவை ஆசரித்த மேல்வீடும், பெந்தெகொஸ்தே நாளுக்காக சீஷர்கள் காத்திருந்த மேல்வீடும் (1:13) இந்த வீட்டின் மேல் வீடாயிருக்கலாம் என்று எண்ணுகின்றனர், ஆனால் இது ஒரு யூகம் மட்டுமே யாகும். எருசலேமிலிருந்த சபையின் உறுப்பினர்கள் அப்பொழுதும் கூட தனிப்பட்ட சொத்துக்கள் வைத்திருந்தார்கள் என்பதைக் கவனியுங்கள், "நிதியைத் திரட்டுவது" என்பது சுயவிருப்பத்தைச் சார்ந்ததாயிருந்தது என்ற உண்மையை மீண்டும் ஒருமுறை அடிக்கோடிடுங்கள். எல்லாக் கிறிஸ்தவர்களும் தங்கள் சொத்துக்களை விற்கவில்லை. [12]ரோதை ஒரு கிறிஸ்தவள் என்பதையும், அவளும் பேதுருவுக்காக ஜெபித்திருப்பாள் என்பதையும் அவளது சந்தோஷம் சுட்டிக்காட்டுகின்றது. [13](ஏவப்பட்டிராத ஒரு ஆதிப் பாரம்பரியத்தின்படி) யாக்கோபு சபையின் மூப்பர்களில் ஒருவராக ஊழியம் செய்திருந்தபடியினாலும், எருசலேமில் இருந்த சபையில் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இருந்தபடியினாலும் (15:2, 22), "யாக்கோபுக்கும் சகோதரருக்கும்" என்பது எருசலேமின் சபையிலிருந்த மூப்பர்களைக் குறிக்கலாம் என்று சிலர் நினைக்கின்றனர். [14]இச்சமயத்தில் பேதுரு ரோமாபுரிக்குச் சென்று, அடுத்த இருபத்தி ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் ரோமாபுரியில் முதல் மூப்பராகப் பணியாற்றியதாகச் சிலர் நம்மை நம்ப வைக்கலாம். ஆயினும், அதிகாரம் 15ல் பேதுருவை நாம் மறுபடியும் எருசலேமில் காண்கின்றோம், எனவே அது உண்மையல்ல என்பது தெளிவு, சிலர் கலா. 2:11ல்

*பேதுரு அந்தியோகியா சென்றது பற்றிக் குறிப்பிட்டு அது இந்த நிகழ்ச்சியின்போது நடந்திருக்கலாம் என்கின்றனர். பேதுரு கொரிந்துவுக்குச் சென்றிருந்தார் என்று 1 கொரி. 1:12 சுட்டிக்காட்டுகிறது. இது சாத்தியமே, ஏனெனில் பேதுரு எருசலேம் அல்லது அதன் சுற்றுப் புறங்களில் தமது விரோதிகள் அறியாமல் ஒளிந்து கொள்ள ஒரு இடம் தேடினார். [15]பன்னிருவரில் ஒருவரின் மரணமானது எவ்வகையிலும் அனுகூலமானதென்று கூறுவது குறிப்பிடத்தக்கதே, ஏனென்றால், சபையானது ஒரு குறுகிய காலத்திலேயே வளர்ந்தது, அப்போஸ்தலர்கள் சபையின் முன்னோடிகளாக மற்ற மனிதர்களைப் பயிற்றுவித்திருந்தார்கள் என்பதும் அற்புதமான செயல்பாடேயாகும்.*




பவுலின் முதலாம் நற்செய்திப் பயணம்

## ஒத்துழைப்பு: பிரமாணமா அல்லது அன்பா?

நான் ஆஸ்திரேலியாவில் ஊழியம் செய்து கொண்டிருந்த போது, சபைகள் ஒரு குறிப்பிட்ட வழியில் மட்டுமே ஒத்துழைக்க முடியும் என்று பிரசங்கித்துக் கொண்டிருந்த மக்களுடன் கணிசமான அளவு தொடர்பும், கலந்துரை யாடலும் மேற்கொண்டிருந்தேன். அந்த வேளையில், நான் அப்பிரச்சனையுடன் தொடர்புள்ள மூன்று புத்தகங்கள் (தற்போது அச்சில் இல்லை) எழுதினேன். அந்த விஷயம் பற்றி நான் அநேக உண்மைகளைக் கற்றுக் கொண்டேன். முதலாவது, குறிப்பிட்ட சில வகையிலான ஒத்துழைப்பு மட்டுமே வசன ரீதியானவை என்ற கருத்தைப் பற்றிக் கொண்டிருந்தவர்கள் "புதிய ஏற்பாட்டின்படி மட்டுமேயான சபை ஒத்துழைப்பின் மாதிரி" என்ற கருத்தில் தங்களுக்குள் ஒத்துப் போகாமல் இருந்ததை அறிந்தேன். இக்கருத்தை நயம்பட விவாதிக்கும் போதெல்லாம், முதலாவது அந்நபர் எதை மற்றும் ஏன் நம்பினார் என்று நான் அறிந்து கொள்ள வேண்டியதாய் இருந்தது.

இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக, "சபையின் ஒத்துழைப்புக்கென்று புதிய ஏற்பாட்டு மாதிரி" என்று ஒன்றுமில்லை என்பதை நான் அறிந்தேன். சபை மற்றும் உள்ளூர் சபையின் சுயாதீனம் பற்றிய புதிய ஏற்பாட்டின் போதனையானது, மனித நிறுவனம் அல்லது சபைகளின் நிறுவனம் எதையும் வசன அடிப்படையான ஒத்துழைப்பு என்பதிலிருந்து தவிர்த்து விடுகின்றது, ஆனால் இதை விட்டு, "சபைக்குச் சபை ஒத்துழைப்பு என்பதற்கான தனிப்பட்ட மாதிரி" எதுவும் நாம் பெறவில்லை.

சிலர், "எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காக" (ரோமர் 15:26) பெறப்பட்ட சகாய உதவியின் வழியே ஒரு "தனிப்பட்ட மாதிரியை" காண விரும்புகின்றார்கள், ஆனால் அப்படிப்பட்ட "சபை ஒத்துழைப் புக்கான தனிப்பட்ட மாதிரி" எதுவும் இல்லை. அப். 11:27-30ல் அந்தியோகியாவில் சபையானது எருசலேமில் இருந்த சபைக்கு

உதவி அனுப்பியது என்று கூறப்படுவதில்லை. மாறாக, அதில், அந்தியோகியாவில் இருந்த "சீஷர்கள்" உதவி அனுப்பினார்கள் என்றுதான் கூறப்படுகின்றது. அது அநேகமாக ஒரு உள்ளூர் சபையின் செயல்பாடாக (நான் ஏற்கனவே "முதல் முதல் அந்தியோகியாவிலே ..." என்ற பிரசங்கத்தில் சுட்டிக் காட்டிய படி) இருக்கலாம். ஆனால் அப்படியிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பிறகு ஏன், இந்த வசனப்பகுதியானது *சபைக்குச் சபை ஒத்துழைப்புக்கான "தனிப்பட்ட மாதிரியை"க்* கொண்டுள்ளது என்று வலியுறுத்த வேண்டும்? ஏன் மற்றவர்கள் இந்தக் கற்பனையான "தனிப்பட்ட மாதிரியை"ப் பின்பற்றா திருக்கையில் அவர்களைக் கண்டனம் பண்ண வேண்டும்?

அப். 11:27-30ன் (அப். 11:22 உட்பட) பொருளடக்கத்தைக் கவனிக்கும் போது, இவ்வசனப் பகுதியில் "ஒத்துழைப்பிற்கான மாதிரியானது" பொதுவான ஒன்றாக இருப்பதாக மட்டுமே நாம் காண்கின்றோம்: (1) ஒரு உள்ளூர் சபையானது தனது சொந்த உறுப்பினர்கள்மேல் மட்டும் கவனமுள்ளதாய் இராமல், மற்ற உள்ளூர் சபைகளின் மீதும் ஆர்வத்துடன் இருக்க வேண்டும். (2) வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், ஒரு உள்ளூர் சபையானது, மற்ற உள்ளூர் சபைகளுக்கு அன்பையும் ஆதரவையும் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

## ஏரோதின் வீடு




*நமது வேதாகமப் பாடத்துடன் நேரடியாகத் தொடர்புள்ளவர்களின் பெயர்கள் மட்டுமே பட்டியலிடப் பட்டுள்ளது. பெரிய ஏரோதின் பிள்ளைகளில் அர்க்கெலாயு மற்றும் ஏரோது அந்திப்பா ஆகிய இருவரும் ஒரே தாய்க்குப் பிறந்தவர்கள், மற்றவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட தாய் உண்டு. மேலே பட்டியலிடப்பட்ட பன்னிரெண்டு பேர்களில், அரிஸ்தோபுலுவின் பெயர் மட்டும் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படவில்லை. சலோமி என்ற பெயர் குறிப்பிடப்படவில்லையென்றாலும், அவள் மத்தேயு 14 மற்றும் மாற்கு 6 ஆகிய அதிகாரங்களில் ''ஏரோதியாளின் மகள்'' என்று குறிப்பிடப்பட்டாள்.*

——— *இது ஏரோதின் வீட்டாருக்குள் உள்ள மரபு வழித் தொடர்பைச் சுட்டிக்காட்டுகின்றது.*

– – – *இது ஏரோது அந்திப்பா தனது மைத்துனியாகிய ஏரோதியாளை மணந்ததைச் சுட்டிக்காட்டுகின்றது.*

**———** *இது முதலாம் ஏரோது பிலிப்பு தனது மைத்துனியாகிய ஏரோதியாளை மணந்ததைச் சுட்டிக்காட்டுகின்றது.*